DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 338/2022

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.விஜயக்குமார் | Caste: | |
| Father's Name | : வேலு | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

20.06.2025 – 05.20 PM

1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் அவதாண்டை கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா. எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 08.15 மணியளவில் வேலைக்கு செல்வதற்காக எங்கள் ஊரில் உள்ள கண்மாயில் குளித்து விட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். எனது பெரியப்பா எனது வீட்டிலிருந்து 2 வயலுக்கு அப்பால் உள்ள சத்தார்பாய் வயலில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்.

2. நான் வீட்டிலிருந்து பார்த்தபோது எனது பெரியப்பா வேலை பார்த்துக்கொண்டிருந்த வயலின் வழியாக வந்த முனியசாமி என்பவர் எனது பெரியப்பாவிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். இருவருக்கும் தகராறு ஏற்பட்டதும் எனது பெரியப்பா கீழே விழுந்ததை நான் பார்த்தேன். உடனடியாக வயலுக்கு ஓடிச் சென்று எனது பெரியப்பாவை பார்த்தேன். எனது பெரியப்பாவிற்கு இடது முன் கையிலும், வலது கண் புருவத்திற்கு அருகேயும் வெட்டுக்காயம் இருந்தது.

3. நான் எனது பெரியப்பாவை அழைத்துக் கொண்டு ரோட்டிற்கு கொண்டு வந்தபோது கருப்பசாமி என்பவர் என்னை பார்த்து நீ ஏன் தூக்குகிறாய் என்று கேட்டு உன்னையும் அடிப்பேன் என்று கையை ஓங்கினார். சம்பவத்தை பார்த்த

அருகிலிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்ததும் எனது பெரியப்பாவை கடலாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகமில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:—

1. அ.சா.1 யும், எதிரியையும் தவிர சம்பவ இடத்தில் அன்றைய தினம் வேறு யாரும் இல்லை. சம்பவமானது நான் பார்த்த இடத்திலிருந்து 2 வயல் தாண்டி நடந்தது. அன்றைய தினம் அ.சா.1 யை நான் தூக்கியபோது வேறு யாரும் இல்லை. அன்றைய தினம் சம்பவமானது காலை 08.30 மணியிலிருந்து 09.00 மணிக்குள் நடந்தது. அ.சா.1 க்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் கீழே விழுந்ததை மட்டும் பார்த்தேன். வயல் வரப்பில் நடந்தால் வழுக்கி விழ வாய்ப்புள்ளதா என்றால் அதற்கெல்லாம் வாய்ப்பில்லை.

2. எனது பெரியப்பாவிற்கும் எதிரிகளுக்கும் இடையே முன்பகை உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பாவிற்கும் எதிரிகளுக்கும்இடையே முன்பகை இருப்பதால் எனது பெரியப்பா கொடுத்த பொய் வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் குறித்து தெரியாது என்றாலும், அன்றைய தினம் காலை 08.00 மணியளவிலேயே நான் வேலைக்கு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல.

(ஒம்./—திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.